**தேவையான அளவு உரம் கையிருப்பில் உள்ளது: வீரபாண்டி ஆறுமுகம் தகவல்**

First Published : 13 Apr 2010 02:35:37 AM IST




சென்னை, ஏப்.12: தேவையான அளவு உரம் கையிருப்பில் இருப்பதாக வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

சட்டப் பேரவையில் திங்கள்கிழமை நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதம்:

பாண்டுரங்கன்: தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்: தமிழகத்தில் தேவையான அளவு உரம் கையிருப்பில் உள்ளது. விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை திமுக அரசு செய்து வருகிறது.

பாண்டுரங்கன் (அதிமுக): தமிழகத்தில் உள்ள 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 213 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய இணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று 3 ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தீர்கள். அதில் 3 மின் நிலையங்கள் மட்டுமே செயல்படுகின்றன. மற்றவை என்ன ஆனது?

அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்: தமிழகத்தில் உள்ள 14 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 214 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய இணை மின் நிலையங்கள் ரூ. 1,350 கோடி செலவில் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தை முதல்வரும், துணை முதல்வரும் இந்த மாதத்தில் தொடங்கி வைப்பார்கள்.

பாண்டுரங்கன் (அதிமுக): தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேளாண்மை மன்றச் சட்டத்தை முழுமையாக கைவிட வேண்டும். விழுப்புரத்தில் ஜெயலலிதா ஆர்ப்பாட்டம் நடத்தியவுடன் கரும்புக்கு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ. 1,650-ம், தேர்தலை மனதில் கொண்டு அடுத்த ஆண்டு முதல் டன்னுக்கு ரூ. 2 ஆயிரமும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளீர்கள்.

அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்: அதிமுக ஆட்சியில் 2001-05 வரை கரும்புக்கு டன்னுக்கு ரூ. 745 மட்டுமே வழங்கப்பட்டது. 2006-ல் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு டன்னுக்கு ரூ. 1.014 வழங்குவதாக அறிவித்தீர்கள். அதற்குள் தேர்தல் வந்துவிட்டது.

பாண்டுரங்கன் (அதிமுக): கள் இறக்க அனுமதிப்பது குறித்து மக்களிடம் கருத்துக் கேட்டு அறிக்கை தாக்கல் செய்ய சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒரு நபர் குழு 2009 மே மாதம் அமைக்கப்பட்டது. 6 மாதங்களில் இக்குழு அறிக்கை தாக்கல் செய்யும் என்று கூறப்பட்டது. ஆனால், இன்றுவரை என்ன நிலைமை என்று தெரியவில்லை. இது பற்றி அரசு விளக்கம் தர வேண்டும் என்றார்.

**சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மாணவர்**

First Published : 13 Apr 2010 04:03:42 AM IST

சென்னை, ஏப். 12: சென்னை செட்டிநாடு வித்யாஸ்ரம் பள்ளி மாணவர் விஷ்ணு ஜெயப்பிரகாஷ் மாட்டுச் சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான வழிமுறைகளை கண்டுப்பிடித்திருக்கிறார்.

இதற்காக அமெரிக்காவில் நடைபெற உள்ள "ஒலிம்பியாட்' எனும் அறிவியல் போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றிருக்கிறார்.

இந்த ஆய்வு சம்பந்தமாக அவர் ஐ.ஐ.டி.யில் இரண்டு ஆண்டுகள் ஆய்வகப் பணிகளில் ஈடுப்பட்டிருக்கிறார்.

இந்த அறிவியல் போட்டியில் 60 நாடுகளைச் சேர்ந்த 800 மாணவர்கள் பங்கேற்கிறார்கள். இதில் தமிழகத்தை சேர்ந்த மாணவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

சாணத்திலிருந்து எரிபொருள் செல்கள்: மின்சாரம் உண்டாவாதற்கு முதலில் தேவையான எரிபொருள் செல்களை அவர் மாட்டுச் சாணத்திலிருந்து தயாரித்திருக்கிறார்.

இந்த எரிபொருள் செல்களை சில இயற்பியல் முறைகளின்படி நகரச் செய்யும் போது மின்சாரத்தை பெற முடியும். இந்த முறையில் கிடைக்கும் மின்சாரத்திற்கான செலவு மிகவும் குறைவாகும்.

**ஏப்ரல் 23-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்**

First Published : 13 Apr 2010 06:46:13 AM IST

வேலூர், ஏப். 12: வேலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவுள்ளது.

வழக்கமாக ஒவ்வொரு மாதமும் 3-வது வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படும் இக்கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டு, இம்மாதம் 23-ம் தேதி காலை 10.30-க்கு நடைபெறுகிறது.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் செ.ராஜேந்திரன் வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் சங்க மாநில மாநாடு தமிழக நதிகளை இணைக்க வலியுறுத்தி தீர்மானம்**

First Published : 13 Apr 2010 06:34:43 AM IST

ஒசூர், ஏப்.12:தமிழக நதிகளை உடனடியாக இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்க மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில மாநாடு மற்றும் அகில இந்திய விவசாயிகள் சங்க வைர விழா மாநாடு ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

மாநாட்டின் 2-ம் நாளான திங்கள்கிழமை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் விவரம்:

காவிரி நதிநீர்ப் பிரச்னையில், நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்து 3 ஆண்டுகள்

ஆகிவிட்டது. முல்லைப் பெரியார் அணையில் 142 அடி வரை தமிழகம் தண்ணீர் தேக்கி வைக்கலாம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன.

தமிழகத்தில் வறட்சி, குடிநீர் தட்டுப்பாடு, விவசாய நெருக்கடி போன்றவை தொடரும் நிலையில், காலம் தாழ்த்தாமல் நதிநீர்ப் பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும்.

இந்தியாவில் மரபணு மாற்று விதைகளுக்கு தடை விதிக்க வேண்டும். விவசாயத்திற்கு 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். தமிழக அரசு மின் திருட்டை தடுப்பதுடன், புதிய உற்பத்திக்கு முனைப்பு காட்ட வேண்டும்.

நெல் குவிண்டாலுக்கு ரூ.1500, 9 பிழித்திறன் கொண்ட கரும்பு டன்னுக்கு ரூ.2,500 வழங்க வேண்டும். பருத்திக்கு கூடுதல் விலை வழங்க வேண்டும்.

உரமானியத்தை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். தமிழகத்தில் உள்ள ஏரி, குளம் ஆகியவற்றை தூர் வார வேண்டும். நெல் உற்பத்தியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

இயற்கை வேளாண் உற்பத்தியை ஊக்கப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு வட்டி இல்லா பயிர்க்கடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட 29 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களை விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் துரைமாணிக்கம் வெளியிட்டு உரையாற்றினார்.

**புதுவையில் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.2.50 உயர்வு**

First Published : 13 Apr 2010 01:22:53 AM IST



புதுச்சேரி, ஏப். 12: புதுச்சேரியில் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ. 2.50 உயர்த்தப்படும். எனினும் விற்பனை விலை உயர்த்தப்படாது என்று கூட்டுறவு அமைச்சர் மு.கந்தசாமி கூறினார்.

சட்டப்பேரவையில் இதுகுறித்து அமைச்சர் கந்தசாமி வெளியிட்ட அறிவிப்பு:

கால்நடைத் தீவன மானியத்துக்குப் பதிலாக, பாண்லே ஒன்றியத்துக்கு பிரதம சங்கங்களால் வழங்கப்படும் பாலுக்கு லிட்டருக்கு ரூ.2.50 உயர்த்தி ரூ.16.50-லிருந்து ரூ.19 ஆக வழங்கப்படும். உயர்த்தப்பட்ட தொகைக்கு அரசு மானியம் வழங்கப்படும். இதனால் விற்பனை விலையில் உயர்வு இருக்காது.

**உணவு உற்பத்தி குறைவு: எதிர்க்கட்சிகள் கவலை**

First Published : 13 Apr 2010 02:37:37 AM IST



சென்னை, ஏப்.12: உணவு உற்பத்தி குறைந்து வருவது குறித்து சட்டப் பேரவையில் அதிமுக, பாமக, மார்க்சிஸ்ட், மதிமுக ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

சட்டப் பேரவையில் திங்கள்கிழமை நடைபெற்ற வேளாண் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் இது குறித்து அவர்கள் பேசியது:

அக்ரி கிருஷ்ணமூர்த்தி (அதிமுக): தமிழகத்தில் உணவு உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது. உணவு தானிய உற்பத்தி அதிகரித்து இருப்பதாக அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அது உண்மையானால் ஏன் விலைவாசியை கட்டுக்குள் வைக்க முடியவில்லை?

குறைந்து கொண்டே வரும் விவசாய நிலங்களை அதிகரிப்பது குறித்தும், அதிகரித்துக் கொண்டே செல்லும் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைப்பது குறித்தும் பட்ஜெட்டில் எதுவும் குறிப்பிடாமல் இந்த அரசு மௌனம் சாதிப்பது ஏன்?

கட்டுமானத் தொழில், கனரகத் தொழில், வாகனத் துறை ஆகியவற்றில் 10 முதல் 20 சதவீதம் வரை வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. ஆனால் வேளாண்துறையில் 1.8 சதவீதம் மட்டுமே வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. 1.8 லிருந்து 4 சதவீத வளர்ச்சியை அடைய வேளாண் பல்கலைக்கழகங்களை சீரமைக்க வேண்டும். இப்போதுள்ள வேளாண் கல்வி

வேலை தேடுபவர்களை உருவாக்குகிறதே தவிர, பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில் முனைவோர்களை உருவாக்கவில்லை என்பது வேதனைக்குரிய உண்மை.

பல உழவர் சந்தைகள் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி உள்ளன. 22 சந்தைகளில் மட்டுமே குளிர்பதன வசதிகள் உள்ளன. மீதமுள்ள 136 சந்தைகளில் குளிர்பதன வசதி எப்போது செய்யப்படும்?

பயோ-டீசல் உற்பத்தி செய்ய தேவையான காட்டாமணக்கு சாகுபடிக்கு 50 சதவீத மானியம், மண்டல தேசிய தோட்டக்கலை வாரியம், ஓசூரில் தக்காளி குளிர்பதன கிடங்கு, கிருஷ்ணகிரியில் மாம்பழ குளிர்பதன கிடங்கு, தேனி ஓடைப்பட்டியில் திராட்சை குளிர்பதன கிடங்கு, பல்லடத்தில் வெங்காயத்துக்கு தனி வணிக வளாகம், 39,200 ஏரிகள் தூர்வாரப்படும் என்று கடந்த 4 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் நிலை என்ன? என்று அக்ரி கிருஷ்ணமூர்த்தி கேள்வி எழுப்பினார்.

செந்தமிழ்ச்செல்வன் (பாமக):விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் உணவு உற்பத்தி வெகுவாக குறைந்து கொண்டே வருகிறது. எனவே, நிலத்தை வாங்கவும், விற்கவும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும். வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்கள் நிலங்கள் வாங்குவதைத் தடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும் வகையில் அரசு திட்டங்களை வகுக்க வேண்டும். வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் என்றார்.

டில்லிபாபு (மார்க்சிஸ்ட்):விவசாயம் இயந்திரமயமாகி உள்ளது. அதனால் 85 லட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் சாகுபடி பரப்பும், உணவு உற்பத்தியும் குறைந்து கொண்டே வருகிறது. குறிப்பாக நெல் உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருவது குறித்து "தினமணி'யில் செய்தி வெளியாகி உள்ளது. உணவு உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாய நிலங்களை வேறு உபயோகத்துக்கு பயன்படுத்த தடை விதிக்க வேண்டும். சிறப்பு பொருளாதர மண்டலங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படுவதை நிறுத்த வேண்டும். விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்க வேண்டும்.

அனைத்துப் பயிர்களுக்கும் பயிர் காப்பீடு வழங்க வேண்டும். மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களுக்கு நிரந்தரமாக தடை விதிக்க வேண்டும். தருமபுரி, வேலூர் மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவித்து வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

ஞானதாஸ் (மதிமுக):1991-2001 வரையிலான 10 ஆண்டுகளில் தமிழகத்தில் 80 லட்சம் பேர் விவசாய தொழிலை விட்டு வெளியேறிவிட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்போது நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. இதனால் உணவு உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

விவசாயிகளைப் பாதுகாக்க, ஆதரிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தமிழகத்தில் விவசாயத் துறை வளர்ச்சி மைனஸ் 1.9 சதவீதமாக இருப்பதாக மத்திய திட்டக் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது கவலையளிக்கிறது.

குஜராத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க 15,000 சிறிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. குஜராத் மாடல் என்று அழைக்கப்படும் இதுபோன்ற அணைகளை தமிழகத்திலும் கட்ட வேண்டும். குஜராத்தில் விவசாயத் துறை 14 சதவீத வளர்ச்சி அடைந்துள்ளது. குஜராத்தை இந்த அரசு பின்பற்ற வேண்டும் என்றார்.

**வேளாண் கல்லூரியில் நீச்சல் பயிற்சி நாளை துவக்கம்**

கோவை : கோவை வேளாண் கல்லூரியில் கோடை கால நீச்சல் பயிற்சி முகாம் நாளை முதல் துவங்குகிறது. இதுகுறித்து வேளாண் கல்லூரி டீன் ஜெயபால் கூறியதாவது:வேளாண் கல்லூரியில் ஆண்டுதோறும் கோடை கால விடுமுறையை முன்னிட்டு, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் மக்களுக்கு சிறப்பு கோடைகால பயிற்சி முகாம் நடக் கிறது.வேளாண் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிக்கு மத்தியில், ஏழாவது எண் நுழைவு தோட்ட வாயில் அருகே, 25 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம், 4 அடி ஆழத்திலிருந்து 12 அடி ஆழம் வரை நீச்சல் குளம் உள்ளது. இந்தாண்டும் நாளை முதல்(14ம் தேதி) ஜூன் மாதம் வரையிலும் நீச்சல் பயிற்சி முகாம், தினமும் காலை 6.00 மணி முதல் 1.00 மணி வரையிலும் நடக்கிறது.ஐந்துவயது முதல் சிறியோர், பெரியோர் வயது வரம்பின்றி பங்கேற்க முடியும். கல்லூரி உடற்கல்வி இயக்குனர் ராகவன் முன்னிலையில், நீச்சல் பயிற்சியாளர்கள் பெருமாள், சஷிக்குமார் ஆகியோர் நீச்சல் சிறப்பு பயிற்சி அளிக்கின்றனர். இவ்வாறு டீன் ஜெயபால் தெரிவித்தார். தொடர்புக்கு மொபைல்: 98426 50764, 94867 75495, 98426 50486, 80564 47651 மற்றும் போன் 0422- 6611 279 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**வெயில் கொளுத்துவதால் மஞ்சி தொழில் பணி ஜரூர்**

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதிகளில் கடும் வெயில் அடித்து வருவதால், மஞ்சி மில்களில் மஞ்சி பிரித்தெடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கிணத்துக்கடவு பகுதியில் தென்னை விவசாயம் அதிகளவில் செய்யப்பட்டு வருவதால், நல்லட்டிபாளையம், சொலவம்பாளையம், கோவில்பாளையம், சென்றாம்பாளையம் பிரிவு, சூலக்கல் பிரிவு போன்ற பகுதிகளில், தென்னை மட்டையில் இருந்து மஞ்சியை பிரித்து எடுக்கும் மில்கள் அதிகளவில் துவங்கப்பட்டுள்ளது. மேலும், தாமரைக்குளம், தேவணாம்பாளையம் போன்ற பகுதிகளில் தென்னை மஞ்சியில் இருந்து கயிறு திரிக்கும் தொழிலும் நடந்து வருகிறது. இம்மில்களில் குறைந்தது ஒரு சிப்டுக்கு 50 பேர் கூலி வேலை செய்கின்றனர். அவர்களுக்கு கூலியாக தினமும் 120 ரூபாய் வழங்கப்படுகிறது. இம்மில்களில் பிரித்தெடுக்கப்படும் மஞ்சியை 30 கிலோ எடையுள்ள கட்டுகளாக கட்டப்படுகிறது. இந்த மஞ்சி கட்டுகளை கேரளா வியாபாரிகள் 300 முதல் 350 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்குகின்றனர்.

சீசன் நேரத்தில் ஒரு கட்டு 400 ரூபாய் வரை கேரளா வியாபாரிகளே வாங்குகின்றனர். மேலும், இப்பகுதியில் கயிறு திரிப்பவர்கள் மஞ்சியை வாங்குவதால், இப்பகுதியில் தென்னை மஞ்சி உற்பத்தி அதிகளவில் செய்யப்படுகிறது. கடும் வெயில் அடிக்க துவங்கியதால், மஞ்சி மில்களில் வேலை தீவிரமாக நடந்து வருகிறது. இருப்பினும், மின்வெட்டு காரணமாக கூலித்தொழிலாளர்களுக்கு வேலை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதுதான் மஞ்சி வியாபாரம் சூடுபிடித்து வருகிறது. மின்வெட்டு காரணமாக வேலைகள் பாதிக்கப்பட்டு வருகிறது. மின்வெட்டு நேரம் போக மீதமுள்ள நேரங்களில் வேலை தீவிரமாக நடந்து வருகிறது. மஞ்சி கட்டு வாங்குவதில் கேரளா வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்படும் வாய்ப்புள்ளது. மஞ்சி கட்டு விலை உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாய தொழிலாளர் சங்க பேரவை கூட்டம்**

தர்மபுரி: தர்மபுரி அடுத்த வத்தல்மலை அடிவாரத்தில் பூமரத்தூர் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க பேரவை கிளை கூட்டம் நடந்தது. மாவட்ட துணை செயலாளர் பிரதாபன் தலைமை வகித்தார். தொடர்ந்து நடந்த கிளை நிர்வாகிகள் தேர்தலில் கிளை தலைவராக கிருஷ்ணன், துணை தலைவராக பெருமாள், செயலாளராக மல்லையன், துணை செயலாளராக பெருமாள், பொருளாளராக பச்சமுத்து ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். 'சிதம்பரத்தில் வரும் 24ம் தேதி நடக்கும் ஜாதி மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் திரளாக கலந்து கொள்வது, வத்தல்மலைக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் அரசு பஸ்கள் இயக்க கோருவது, வத்தல்மலை ஆவலப்பன் குட்டை வரையில் தார் சாலை அமைக்க கோருவது உள்ளிட்ட சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முத்துலிங்கம் நன்றி கூறினார்.

**விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

தாண்டிக்குடி: வன விலங்குகளால் ஏற்படும் விவசாய பாதிப்பு குறித்த விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் தாண்டிக்குடியில் நடந்தது. ஒன்றிய கவுன்சிலர் தவசி தலைமை வகித்தார். காமனூர் முன்னாள் ஊராட்சி தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் முன்னிலை வகித்தார். காபி சுய உதவிக்குழு சங்க செயலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். கீழ்பழநிமலை அனைத்து விவசாயிகள் ஒருங்கிணைப்பாளர் நமச் சிவாயம், சோலைக்காடு விவசாயி அழகர்சாமி உள்ளிட்டோர் காட்டெருமைகளால் விவசாயிகள் உயிர்க்கும், பயிர்களுக்கும் ஏற்படும் பாதிப்பு குறித்து பேசினர். கீழ்பழநிமலை சிறுவிவசாயிகள் சங்க செயலர் கோவிந்தசாமி நன்றி கூறினார்.

**மானியத்துடன் காந்தமலர் சாகுபடி : விவசாயிகளுக்கு அதிகாரி அழைப்பு**

கரூர்: அரவக்குறிச்சி தாலுகாவில் காந்தமலர் சாகுபடிக்கு அரசு மானியத்துடன் சொட்டுநீர் பாசனம் அமைத்து லாபம் அதிகமாக பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து அரவக்குறிச்சி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் சவுந்தரம்மாள் கூறியதாவது: அரவக்குறிச்சி, கோவிலூர், சாந்தப்பட்டி, மொடக்கூர், சேந்தமங்கலம் மேல்பாகம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் காந்தமலர் சாகுபடி செய்கின்றனர். இப்பகுதி விவசாயிகள் கிணறு பாசனத்தை நம்பியே விவசாயம் செய்கின்றனர். தற்போது பருவமழை தவறிவிட்டதாலும், கோடை மழை பெய்யாத காரணத்தினாலும் தோட்டத்திலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளது. ஜூன், ஜூலை மாதங்களில் காந்தமலர் சாகுபடி பருவம் துவங்குகிறது. இம்மலர் சாகுபடிக்கு சொட்டு நீர்பாசனம் அமைப்பது மூலம் அதிகமாக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. கடந்தாண்டு சொட்டுநீர்பாசனம் அமைக்காத விவசாயிகள் ஏக்கருக்கு 150 கிலோ மட்டுமே மகசூல் பெற்றனர். சொட்டுநீர் பாசனம் அமைத்தவர்கள் ஏக்கருக்கு 260 முதல் 275 கிலோ வரை மகசூல் பெற்று லாபமடைந்தனர். எனவே, அரசு வழங்கும் 60 சதவீத மானியத்தில், வாய்ப்பை பயன்படுத்தி சொட்டு நீர் பாசனம் அமைத்து அதிக பரப்பளவில் பயிரிட்டு அதிக லாபமடையலாம். மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள அரவக்குறிச்சி யூனியன் அலுவலக வளாகத்தில் செயல்படும் வட்டார வேளாண் அலுவலகத்தை அணுகிடலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**மூலிகை வளர்ப்பில் வனத்துறை**

மதுரை: நமது பாரம்பரிய மூலிகைகளை பாதுகாக்கும் நோக்கில், வனத்துறையின் வேளாண் வனவியல் ஆராய்ச்சி கோட்டம் சார்பில், மதுரை அருகே அழகர்கோவில் பெருமாள்மலை ஆராய்ச்சி மையத்தில் மூலிகை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பாரம்பரிய வைத்திய முறைகளை பாதுகாக்கும் (எப்.ஆர்.எல்.எச்.டி.,) அமைப்பின் நிதி உதவியில் பெருமாள்மலையில் செம்பருத்தி, ஆடாதொடை, சிறு குறிஞ்சான், சக்கரை கொல்லி, தூதுவளை, ஓமவல்லி, துளசி, திருநாற்று பச்சிலை, நெல்லி, நீர் நொச்சி, கருந்துளசி உட்பட 25 வகை மூலிகைச்

செடிகள் நடப்பட்டுள்ளன.இதன் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.மதுரை வேளாண் வனவியல் ஆராய்ச்சி கோட்ட துணை வனப்பாதுகாவலர் ஜெயச்சந்திரன் கூறியதாவது: இம்மூலிகைச் செடிகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குகிறோம். வில்வம், தூதுவளை, சரக் கொன்னை, தானி மூலிகைச் செடிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது, என்றார்.

**மழை பொய்த்ததால் பட்டு போன தென்னைகள் : விவசாயிகள் பெரும் பாதிப்பு**

சோழவந்தான்: சோழவந்தான் பகுதியில் பருவமழை தவறியதாலும், கடுமையான வெயிலாலும் தென்னைமரங்கள் பட்டுபோனதுடன் விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளது. பாதிக்கப் பட்ட விவசாயிகள் சோகத்துடன் உள்ளனர். சோழவந்தான், தென்கரை, முள்ளிப் பள்ளம், மேலக்கால், திருவேடகம் கச்சிராயிருப்பு, மட்டையான், குருவித் துறை, மண்ணாடிமங்கலம், கருப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை மரங்கள் அதிகளவு உள்ளன. 20 ஆண்டிற்கு முன், தேங்காய் மகசூல் கூடுதலாக இருந்தன.இப்பகுதியில் இருந்து தேங்காய் அண்டைமாநிலத்திற்கு, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. விவசாயிகள் பலர் கூடுதல் லாபம் அடைந்தனர். பல ஆண்டிற்கு முன் தென்னையில் செம்பேன் நோய் தாக்குதலால், தேங்காய் வளர்ச்சி குன்றியதுடன், ருசியும் மாறியது. இதனால் தென்னை விளைச் சல் பெரிதும் பாதிக்கப் பட்டது. இதனால் ஏற்றுமதியும் குறைந்தது. கடந்த 16 ஆண்டிற்கு மேலாக தென்னை சாகுபடியில் லாபம் இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். வேறு தொழில் தெரியாததால் விவசாயிகள் இருக்கும் மரங்களை காப்பாற்றி, பிழைப்பு நடத்தி வருகின்றனர். தற்போது பல மாதங்களாக மழை பெய்யவில்லை. இப்போது அடிக்கும் வெயிலில் தென்னை மரங்களில் தேங்காய் உற்பத்தி குறைந்து, மட்டைகள் சருகாகி பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் கண்ணீர் விடும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

விவசாயி சரவணக்குமார் கூறியதாவது:
பல ஆண்டுகளாக, ஆயிரம் தேங்காய் 2.500 ரூபாய் விலை மார்கெட்டில் விற்கிறது. விலை குறைவால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். முன்பு ஒரு மரத்தில் 145 காய் பறிக்கலாம். சில ஆண்டிற்கு முன் ஏற்பட்ட நோய் தாக்குதலால் ஒரு மரத்திற்கு 40 காய் உற்பத்தியானது. காய் பறிப்பது உட்பட பல்வேறு வகைகளில் ஏற்படும் கூடுதல் செலவால் சிரமப்படுகிறோம். அதனால் செலவுகளை கட்டுப்படுத்த தேங்காய்களை பறிப்பதில்லை, மரங்களிலேயே விட்டுவிடுகிறோம். தேங்காய் விலை கூடாததால், குடும்ப செலவிற்கு கூட அடுத்தவரின் கையை எதிர்பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கிணறுகளில் தண்ணீர் இல்லை. கடுமையான வெயில் காரணமாக மரங்கள் பட்டு வருகிறது. விவசாயிகள் பலர் தென்னை மரங்களை வெட்டி விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வங்கியில் வாங்கிய கடனை திருப்பி செலுத்தமுடியாமல் கஷ்டப்படுகிறோம். அரசு நிவாரணம் வழங்கவேண்டும், என்றார்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் சினைப்பருவ மேலாண் பயிற்சி**

நாமக்கல்: 'நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 15ம் தேதி கறவை மாடு வளர்ப்பில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு மற்றும் இனப்பெருக்க மேலாண் பயிற்சி முகாம் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கறவைமாடு வளர்ப்பில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு மற்றும் இனப்பெருக்க மேலாண்மை பயிற்சி முகாம் வரும் 15ம் தேதி நடக்கிறது. பயிற்சியில் சினைப்பருவ அறிகுறிகள், சினைப்பருவத்துக்கு வராத மாடுகளை சினைப்படுத்துதல் போன்றவை குறித்து விளக்கப்பட உள்ளது. இதில், பங்கேற்பவர்கள் நாமக்கல்- மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு வந்து 14ம் தேதிக்குள் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேயிலை பிரச்னையை வலியுறுத்தி மத்திய அமைச்சருக்கு கோரிக்கை மனு**

ஊட்டி : தேயிலை பிரச்னையை தீர்க்க வலியுறுத்தி, நீலகிரி மாவட்ட ஜனநாயக சிந்தனையாளர் பேரவையினர் 5,000 கோரிக்கை மனுக்களை மத்திய அமைச்சருக்கு அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

ஜனநாயக சிந்தனையாளர் பேரவை அமைப்பாளர் சதாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கை: உலக சந்தையில் தேயிலைத் தூளுக்கு வரவேற்பு இருந்ததால், பசுந்தேயிலைக்கு 15 ரூபாய் வரை விலை கிடைத்து வந்தது. இருப்பினும், விலைவாசி உயர்வால், அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தேயிலை விவசாயிகள் அவதிப்படுகின்றனர். உரம் விலையேற்றம், தொழிலாளர்களின் ஊதிய ஏற்றம் உட்பட காரணங்களால், விவசாயிகள் கடனின் சிக்கித் தவிக்கின்றனர். தற்போது, பசுந்தேயிலையின் விலை, சரிவை நோக்கி சென்றுக் கொண்டிருப்பது, விவசாயிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. தேயிலை பிரச்னையில், அரசியல் கட்சிகளின் தலையீடு எதிர் விளைவைத் தான் ஏற்படுத்தக் கூடும் என்பதால், விவசாயிகள் பிரச்னையை நேரடியாகவே அரசின் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும் என கோரிக்கை விடப்பட்டது.

முதற்கட்டமாக 5,000 கோரிக்கை மனுக்களை, நீலகிரி எம்.பி.,யும், மத்திய தொழில்நுட்ப அமைச்சருமான ராஜாவுக்கு அனுப்ப, அச்சிடப்பட்ட கோரிக்கை மனுக்களை விவசாயிகள் மத்தியில் வினியோகிக்க, ஜனநாயக சிந்தனையாளர் பேரவை முடிவு செய்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தின் அடிப்படையில், பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும்; உலக சந்தையில், நீலகிரி தேயிலைத் தூளின் தேவையை அதிகரிக்கும் வியாபார யுக்தியை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும், தேயிலை உரத்துக்கு மானியம் அளிக்க வேண்டும் என்பன உட்பட பல கோரிக்கைகள் வலியுறுத்தப்பட உள்ளன. இவ்வாறு, ஜனநாயக சிந்தனையாளர் பேரவை அமைப்பாளர் சதாசிவம் கூறியுள்ளார்.

**75 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் குறைவு : 50 சதவீதம் மானியத்தில் தீவனம் பால் உற்பத்தியாளர் கோரிக்கை**

சேலம்: 'சேலம் பால் பண்ணையின் கொள்முதலில் நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் லிட்டர் பால் குறைந்துள்ளது. பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பால்கொள்முதல் விலை உயர்வு, 50 சதவிகித மானியத்தில் தவிடு, புண்ணாக்கு மற்றும் கலப்பு தீவனம் ஆகியவற்றை வழங்க வேண்டும்' என, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க பொதுச்செயலாளர் ராஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம், நாமக்கல் மாவட்டங்கள் அடங்கிய சேலம் பால் பண்ணையில் நான்கு மாதங்களுக்கு முன் வரை 4.50 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி, தீவனத்தட்டுப்பாடு, தவிடு, புண்ணாக்கு, கலப்பு தீவனம் விலையேற்றத்தால், பால் உற்பத்தி செலவு அதிகரித்தது உள்ளிட்ட காரணங்களால், பராமரிக்க வழியில்லாமல் போய் விடுமோ என்ற பயத்தில் பெரும்பாலான சினைமாடுகளை விவசாயிகள் விற்றுவிட்டனர்.

மாடுகள் கன்று போடுவது குறைந்து, உற்பத்தி தடைபட்டதால், சேலம் பால் பண்ணையில் கொள்முதல் அளவு 3.75 லட்சம் லிட்டராக குறைந்துள்ளது. அதாவது, கொள்முதலில் நாளொன்றுக்கு 75 ஆயிரம் லிட்டர் பால் குறைந்துள்ளது. இதே நிலை நீடித்தால், மே மாத இறுதிக்குள் கொள்முதல் அளவு படிப்படியாக குறைந்து மூன்று லட்சம் லிட்டரானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தற்போது பால் கொள்முதல் அளவு குறைவதை ஈடுகட்ட பால் சேகரிப்பு குழுவில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு இலக்கு நிர்ணயிக்கின்றனர். இலக்கை அடையாவிட்டால், பல்வேறு மிரட்டல்களும் வருகின்றன. இதற்கு பயந்த அதிகாரிகள் தனியார் நிறுவனங்களுக்கு பால் வழங்கி வரும் பால் 'வெண்டர்'களை அணுகி, அவர்களிடமிருந்து பாலை வாங்கி சங்கத்தின் இலக்கை நிறைவேற்றுகின்றனர். நான்கு சதவிகிதம் கொழுப்பு, எட்டு சதவிகிதம் இதர சத்துள்ள தரமுள்ள பாலையே சங்கம் கொள்முதல் செய்கிறது.

வென்டர்களது பாலின் தரம் 3 சதவிகிதம் கொழுப்பு, 7.5 சதவிகிதம் இதர சத்துகள் கொண்ட தண்ணீர் கலந்த பாலாக இருக்கும். இந்த தரம் குறைந்த பாலை வாங்கி, சங்கங்களின் தரம் வாய்ந்த பாலுடன் கலக்கும் போது, மொத்த பாலின் தரமும் குறைகிறது. இப்படி தரம் குறைந்த பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு அனுப்பும் போது, அவர்கள் தரம் அடிப்படையில் விலை நிர்ணயிக்கும் போது, பாலின் விலை குறைவாக கிடைக்கிறது. சங்கங்கள் பெரிதும் நஷ்டம் அடைகின்றன. இந்த செய்கைகளை உடனடியாக அதிகாரிகள் கைவிட வேண்டும். உடனடியாக பால் கொள்முதல் விலை உயர்வு கொடுத்தும், பால் கொள்முதலில் இரட்டை விலை முறையை அமல்படுத்தி, ஜனவரி முதல் ஜூன் வரை வறட்சி கால விலையாக அரசின் நிதியிலிருந்து, லிட்டருக்கு இரண்டு ரூபாய் ஊக்கவிலை உயர்வு கொடுக்க வேண்டும். சினை மாடுகள் விற்பனை செய்வதை அரசு நிறுத்தும் முயற்சியாக கிராம கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உடனடியாக தவிடு, புண்ணாக்கு, கலப்பு தீவனங்களை 50 சதவிகிதம் மானியத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும். அதனால் சேலம் பால் பண்ணையின் கொள்முதல் அளவு குறைவதை தடுக்க முடியும். வருங்காலங்களில் கொள்முதல் அளவை கூட்டவும் முடியும்.

**பயறு சாகுபடிக்கு மானியம்**

சிவகங்கை: சிவகங்கை அருகே முத்துப்பட்டியில் உழவர் தின விழா நடந்தது. உழவர் பயிற்சி நிலைய அலுவலர் லயோலா அன்புக்கரசி வரவேற்றார். முத்துப் பட்டி ஊராட்சி தலைவர் தங்கம்மாள் முன்னிலை வகித்தார். விவசாய அலுவலர் தவசிமுத்து, தோட்டக்கலை அலுவலர் விமலா பங்கேற்றனர். விவசாய இணை இயக்குனர் ரவிகுலசேகரபாண்டியன் பேசுகையில், "விவசாயிகள் பயறு வகை சாகுபடிகளில் அதிகளவில் ஈடுபடவேண்டும். இதற்காக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 2,500 ரூபாய் மானியத்தில் விதை, உரம் உள்ளிட்டவை வழங்கப்படுகிறது. மண்புழு உரம் தயாரிப்பு யூனிட்டிற்கு ஒரு லட்சம் ரூபாய் வரை செலவாகும். இதற்கு மானியமாக 50 ஆயிரம் வழங்கப்படும். விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்," என்றார். உதவி அலுவலர் முத்துமணி நன்றி கூறினார்.

**விவசாய நலவாரியத்தில் ரூ. 415 கோடி உதவி : வாரிய தலைவர் தகவல்**

சிவகங்கை: "விவசாய தொழிலாளர், விவசாயிகள் நலவாரியம் சார்பில் 415 கோடி ரூபாய்க்கு, உதவிகள் வழங்கப்பட்டுள்ளன," என வாரிய தலைவர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்தார். வாரிய உதவிகள் வழங்கும் விழா சிவகங்கையில் நடந்தது. கலெக்டர் மகேசன் காசிராஜன் தலைமை வகித்தார். பணிகள் குறித்து ஆய்வு செய்த, ராமலிங்கம் பேசியதாவது: இத்திட்டத்தில் சென்னையை தவிர்த்து, 75 லட்சத்து 73ஆயிரத்து 643 குடும்பங்களுக்கு, அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஒரு கோடி 73 லட்சத்து 761 உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஐந்து லட்சத்து 10 ஆயிரத்து 504 பயனாளிகளுக்கு, 415 கோடி ரூபாய் உதவி வழங்கப்பட்டுள் ளது. சிவகங்கை மாவட்டத்தில் 16 ஆயிரத்து 63 பயனாளிகளுக்கு, 16 கோடி 14 லட்சத்து 25 ஆயிரத்து 708 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத் தில் மலை தோட்டப்பயிர் செய்யும் விவசாயிகளும், நீலகிரி, கோவை, கன்னியாகுமாரி மாவட்ட தோட்ட தொழி ளாலர்களும் பயன் அடைந் துள்ளனர்," என்றார். இணை தலைவர் செல்லமுத்து, டி.ஆர்.ஓ., சிவஞானம், துணை கலெக்டர் பிரம்மநாயகம், இணை இயக்குனர் (சுகாதாரம்) ரகுபதி பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்பட நீர்வள திட்ட வாகனம் கிராமத்தில் பயணம்**

தூத்துக்குடி : நீர்வள நிலவள திட்டம் விழிப்புணர்வு குறித்த பிரசார ஊர்தி தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயன் பெறும் வகையில் கிராமங்களுக்கு செல்கிறது. நேற்று உப்போடை உபவடிநில பகுதிகளுக்கு இந்த ஊர்தி சென்றது. நாளையும், நாளை மறுநாளும் இந்த பகுதிகளை சுற்றி வருகிறது.உலக பாங்க் நிறியுதவியுடன் கடந்த 2007 ஆண்டு முதல் நீர்வள நிலவள திட்டம் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

மொத்தம் தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு வேளா ண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை விற்பனைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை ஆகியவைகள் ஒருங்கிணைந்து மொத்தம் 2 ஆயிரத்து 547 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 67 உப வடிநிலங்களில் 9 உபவடிநிலங்கள் முதல் ஆண்டிலும், 16 உப வடிநிலங்கள் இரண்டாம் ஆண்டிலும், 30 உப வடிநிலங்கள் மூன்றாம் ஆண்டிலும் மற்றவை அடுத்து வரும் ஆண்டுகளிலும் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

விவசாயிகளிடம் இந்த திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும், இந்த திட்டத்தின் பயன்பாடு குறித்து விளக்குவதற்காக தூத்துக்குடி மாவட்டத்தில் உப்போடை வடிநிலம்,கோரம் பள்ளம் ஆறு வடிநிலம், சாலிகுளம் ஆறு வடிநிலம் சார்ந்த கிராமங்களில் பிரசார ஊர்தி செல்கிறது.இந்த ஊர்தியில் இந்த திட்டம் சம்பந்தமாக முழு விபரம் இருக்கும். துறை அதிகாரிகளும் இருப்பர். அவர்கள் இந்த திட்டம் குறித்து விவசாயிகளிடம் முழுமையாக எடுத்துக் கூற உள்ளனர். நேற்று கோவில்பட்டியில் இந்த ஊர்தி ஆர்.டி.ஓ தலைமையில் துறை அதிகாரிகளின் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது.வரும் 14ம் தேதி வரை உப்போடை வடிநில கிராமங்களிலும், 15ம் தேதி முதல் 16ம் தேதி வரை சாலிகுளம் ஆறு வடிநில கிராமங்களிலும், 17ம் தேதி கோரம்பள்ளம் ஆறு வடிநில பகுதி கிராமங்களிலும் சுற்றுப்பயணம் செய்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது.இந்த வாய் ப்பினை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று வேளாண்மைத்துறை துணை இயக்குநர் தனசிங் டேவிட், கோரம்பள்ளம் வடிநில கோட்ட செயற்பொறியாளர் குமாரசாமி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**விவசாயிகளுக்கு பாசன கருவி வழங்கல்**

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி தாலுகாவில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் பாசன கருவிகள் வழங்கும் விழா நெடும்பலம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. விவசாயிகளுக்கு பாசன கருவிகளை வழங்கி வேளாண் உதவி இயக்குனர் எம்பெருமாள் பேசுகையில், "தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இரண்டு விவசாயிகளுக்கும், தேசிய வேளாண் பெருக்கத்திட்டத்தில் பயறு வகை ப யிரில் செயல் விளக்கம் அமைத்த 15 விவசாயிகளுக்கும், தேசிய வேளாண் பெருக்கத்திட்டத்தி ல் ஒருவருக்கும், பயறு வகை ஒருங்கிணைத்த திட்டத்தில் இருவருக்கும் 50 சதவீத மானியத்தில் பாசன கருவிகள் வழங்கப்பட்டுள்ளது," என்றார். வேளாண் அலுவலர்கள் தவமணி, தெய்வேந்திரன், உதவி அலுவலர்கள் சாமிநாதன், சிவகுமார், ஜோதிகணேசன், செந்தில் உட்பட பலர் பங்கேற்றனர்.

**ஸ்ரீவி.,யில் கரும்பு உற்பத்தி...குறைவு : வெல்லம் விலை உயர்வு**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி.,யில் வேலைக்கு ஆட்கள் கிடைக்காததால், உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு, வெல்லம் விலை கிலோ 26லிருந்து 29 ரூபாயாக உயர்ந்து உள்ளது. இப்பகுதியில் வறட்சியிலும், தண்ணீர் வற்றாத சில கிணறுகளை நம்பி, விவசாயிகள் கரும்பு பயிரிட்டனர். கடந்த மாதம் வரை வெல்லம் விலை எதிர்பார்த்த அளவு உயராததால், கரும்பு

விவசாயிகள் வேதனை அடைந்திருந்தனர். தற்போது கிராமங்களில் கோயில் விழாக்கள் நடப்பதால் வெல்லம் உற்பத்தி செய்வதற்கு, ஆள் கிடைக்காமல் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் கடந்த மாதம் வரை, கிலோ 26 ரூபாய் வரை விற்கப்பட்ட வெல்லம், தற்போது 29 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து விவசாயி மூக்கையா கூறியதாவது: கோயில் விழாக்களால் வேலையாட்கள் வரவில்லை. வெல்லம் ஆலைகளை இயக்க முடியாமல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள், வெளியூர்களிலிருந்து வெல்லத்தை வாங்கி அதிக விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விழாக்கள் முடிந்த பின், விலை குறையும் வாய்ப்பும் மிகக் குறைவாகவே உள்ளது, என்றார்.

**நீர் பற்றாக்குறையால் நெல்லில் இருந்து பயறுக்கு சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்**

ராஜபாளையம்: தண்ணீர் பற்றாக்குறை காரணமாக இரண்டாம் போகமாக நெல், பருத்தி பயிரிடுவதற்கு பதிலாக பயறுவகை சாகுபடிக்கு விவசாயிகள் மாறியுள்ளதால், அதன் சாகுபடி பரப்பளவு அதிகரித்து உள்ளது. ராஜபாளையத்தில் வட கிழக்கு பருவ மழையையொட்டி செய்யப்படும் முதல் போக நெல் சாகுபடிக்கு பின், தண்ணீர் இருப்பை பொறுத்து, பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுவது வழக்கம். சில ஆண்டுகளாக பருத்தி சாகுபடிக்கு ஏற்ற சூழ்நிலை இல்லாததாலும், பூச்சித் தாக்குதல், விலை வீழ்ச்சியாலும், பருத்தி சாகுபடியை விவசாயிகள் விரும்புவதில்லை. நடப்பு பருவத்தில், கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துவிட்டதால், பலரும் உளுந்து உள்ளிட்ட பயறு வகை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டு 250 எக்டேரில் மட்டுமே பயரிடப்பட்ட உளுந்து உள்ளிட்ட பயிர்கள், நடப்பாண்டில் 500 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதுவரை 3 டன் உளுந்து விதை விற்பனையாகி உள்ளது.

**நிலக்கடலை வரத்து அதிகரிப்பு**

அவிநாசி : சேவூரில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு வரத்து அதிகரித்திருந்தது; விலையும் உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 240 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டி லும் 40 மூட்டை அதிகம். ஏலம் அதிகரித்திருந்த நிலையில், விலையும் உயர்ந்துள்ளது. நேற்றைய ஏலத்தில் காய்ந்த நிலக்கடலை முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.2,860 முதல் ரூ.3,000 வரை, இரண்டாம் ரகம் ரூ.2,550 முதல் ரூ.2,710 வரை, பச்சை நிலக்கடலை குவிண்டாலுக்கு ரூ.1,730 ஏலம் போனது.ஏலம் குறித்து ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) நடராஜன் கூறுகையில், "ஏலத்துக்கு கடந்த இரு வாரங்களாக வரத்து அதிகரித்துள்ளது. பெரும்பாலும் புது நிலக்கடலையை விவசாயிகள் ஏலத்துக்குகொண்டு வருகின்றனர். நேற்றைய ஏலத்தில் 40 விவசாயிகள், ஏழு வியாபாரிகள் பயனடைந்தனர். சேவூர் ட்டாரத்தில் இருந்து மட்டும் நிலக்கடலை வரத்தாக இருந்தது. மழை பெய்யும் பட்சத்தில் வரத்து தொடர்ந்து அதிகரிக்கும்," என்றார்.

**பலாப்பழ சீசனும் ஆரம்பம்**

ருப்பூர் : முக்கனிகளில் ஒன்றான பலாப்பழ சீசன் துவங்கி விட்டது. கேரள மாநிலத்தில் இருந்து திருப்பூருக்கு பழங்கள் வந்த வண்ணம் உள்ளன. ஒரு வாரமாக பழங்களின் வருகை இருந்தது. முழு பழம் ஒன்று 200 ரூபாய் வரையும், சில்லரை விற்பனையில் 10 ரூபாய்க்கு ஐந்து முதல் ஏழு சுளை வரை விற்கப்படுகிறது. மாம்பழம் சீசனும் ஆரம்பித்துள் ளதால், மக்கள் கூட்டம் பழக்கடைகளில் அலைமோதுகிறது.

பலாப்பழ வியாபாரி மீரான் கூறுகையில், "கேரளா மாநிலத்தில் தான் அதிகளவில் பலாப் பழங்கள் விளைகின்றன. ஒரு வாரமாக பழங்கள் வந்தாலும், சில நாட்களில் தான் பழங்களின் வருகை அதிகளவில் உள்ளது. ஆடி மாதம் வரை, நான்கு மாதங்களுக்கு சீசன் இருக்கும். சீசன் துவங்கி இருப்பதால், விற்பனையும் சூடுபிடிக்கத் துவங்கி யுள்ளது.

பழங்களின் அளவுக்கேற்ப, விலை நிர் ணயம் செய்யப்படுகிறது. பழங்கள் 40 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விற்கப்படுகின்றன," என்றார்.

**வறண்டது அமராவதி அணை**

உடுமலை : நீர் வரத்து இல்லாமல் அமராவதி அணை வறண்டுள்ள நிலையில், பயன்படுத்த முடியாத அளவு தண்ணீர் குறைந்து துர்நாற்றம் வீசத் துவங்கியுள்ளது.உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம், திருப்பூர், கரூர் மாவட்டங்களில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை ஏமாற்றியதால், இந்தாண்டு அமராவதி அணை நீர் மட்டம் வேகமாக சரிந்தது. பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்ட நிலையில், அணை நீர் மட்டம் பயன்படுத்த முடியாத ('டெட் ஸ்டோரேஜ்') நிலைக்கு சென்றுள்ளது. பயன்படுத்த முடியாத நீரின் அளவான 15 அடி தண்ணீரும் வறண்டு வருவதால், நீர் தேக்க பரப்பு மைதானம் போல் மாறியுள்ளது. சேறும், சகதியுமாக காணப்படும் தண்ணீரால் துர்நாற்றம் வீச துவங்கியுள்ளது.நீர் மட்டம் வேகமாக குறைய துவங்கியதும், மீன் பிடிப்பு பணிகள் தீவிரமடைந்தது. தற்போது, அணையில் உள்ள தண்ணீர் மாசுபட்டுள்ளதால் மீதமுள்ள மீன்கள் உயிர்வாழ்வது கேள்விக் குறியாகியுள்ளது. கடந்த வாரம் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை தொடரவில்லை. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**பி.ஏ.பி., பாசனத்தில் தண்ணீர் இல்லை: பாதி வளர்ந்த நிலக்கடலையால் தவிப்பு**

உடுமலை : பி.ஏ.பி., பாசனத்தில் தண்ணீர் கிடைக்காததால், அரைகுறையாக விளைந்த நிலக்கடலையையும் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.உடுமலை, ஆண்டியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு விவசாயிகள் அதிகளவு நிலக்கடலை பயிரிட்டனர். அர்த்தநாரிபாளையம் கிளை வாய்க்காலில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. இதற்காக, திருமூர்த்தி அணையில் இருந்து வரும் பி.ஏ.பி., பிரதான கால்வாய் 5.6 கி.மீ., ஷட்டரில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இக்கால்வாய், அர்த்தநாரிபாளையம் பகுதி வரையுள்ள 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேலுள்ள நிலங் களுக்கு பாசன வசதி அளிக்கிறது. முதலாம் மண்டல பாசனம் துவங்கியதில் இருந்து கிளை கால்வாயில் முறையான நீர் நிர்வாகம் இல்லாததால், நிலக் கடலைக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் கருகும் நிலை ஏற்பட்டது. இப்பகுதியில் பெய்த மழையால் சாகுபடியில் பாதி விளைச்சல் கிடைக்கும் நிலை ஏற்பட்டது. தற்போது, பயிர்கள் அறுவடை தருணத்தில் உள்ளது.கோடை வெப்பத்தால் நிலக்கடலை பயிரிடப் பட்டுள்ள நிலப்பரப்பு முழுவதும் தற்போது இறுகியுள்ளது. விளைநிலங்களில் தண்ணீர் பாய்ச்சிய பிறகே, நிலக்கடலையை அறுவடை செய்ய வேண்டிய நிலையுள்ளது. பி.ஏ.பி., பாசன சுற்றில் குறித்த நேரத்தில் தண்ணீர் திறந்து விடாததால், அரைகுறையாக விளைந்த நிலக்கடலையையும் அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஆண்டியூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது: பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தை நம்பி மேற்கொள்ளப்பட்ட அனைத்து சாகுபடிகளும் வீணாகியுள்ளன. பாசன காலம் முழுவதும் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. வளர்ச்சி மற்றும் காய்ப்பு பருவத்தில் பாசன தண்ணீர் கிடைக்காததால், ஏக்கருக்கு 20 மூட்டை கிடைக்க வேண்டிய விளைச்சல் 10 மூட்டையாக குறைந்துள்ளது. இந்த விளைச்சலையும் அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது. கடந்த வாரம் திறந்து விட வேண்டிய சுற்று தண்ணீர் இன்னும் கிளை வாய்க் காலில் திறக்கப்பட வில்லை, என்றனர்.

**சின்னவெங்காயம் இருப்பு வைப்பு**

உடுமலை : கர்நாடகாவில் இருந்து வெங்காயம் வரத்து குறைவதால், கூடுதல் விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், உடுமலையில் சின்ன வெங்காயத்தை விவசாயிகள் இருப்பு வைத்து வருகின்றனர்.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் சின்ன வெங்காயம் பயிரிடப் பட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த சீசனில் பல்வேறு காரணங்களால் விளைச்சல் குறைந்து, விலையும் சரிந்தது. இதனால், வசாயிகள் கவலை அடைந்திருந்தனர். கடந்த சில நாட்களாக, கர்நாடகா வில் இருந்து சந்தைக்கு வரத்து குறைந்து வருகிறது. இதனால், உள்ளூர் சந்தைகளில் சின்ன வெங்காயம் விற்பனை விலை, 12 ரூபாயில் இருந்து 14 ரூபாயாக உயர்ந்துள்ளது. வெளிமாநில வரத்து குறைந்துள்ளதால், விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அறுவடை செய்த வெங்காயத்தை விவசாயிகள் இருப்பு வைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். விளைநிலங்களில் பட்டறை அமைத்து வெங்காயம் இருப்பு வைப்பது அதிகரித்துள்ளது.

பெதப்பம்பட்டி பகுதி விவசாயிகள் கூறியதாவது: ஆட்கள் பற்றாக்குறையால் சின்ன வெங்காய சாகுபடி செலவு பல மடங்கு உயர்ந்துள்ளது. வீரிய ரக வெங்காயத்தை அதிக நாட்கள் இருப்பு வைக்க முடியாது. அறுவடை சமயத்தில் விலை வீழ்ச்சி ஏற்பட்டாலும், உடனடியாக விற்பனை செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். வெளிமாநில வரத்து குறைந்துள்ளதால், வியாபாரிகள் கொள்முதல் விலையை இரண்டு ரூபாய் வரை அதிகரித்துள்ளனர். விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால், சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து, விற்பனை செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறோம், என்றனர்.

**வேளாண் துறை உரக்கடைகளில் திடீர் ஆய்வு**

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளில் வேளாண் துறை சார்பில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது.திருப்பூர் மாவட்டத்தில் உள்ள உர மொத்த வியா பாரம், சில்லரை வியா பாரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்யும் கடை களில் திடீர் ஆய்வு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. வேளாண் துறையினர் நான்கு குழுக்களாக பிரிந்து, மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்து வரு கின்றனர்.பொங்கலூர் வேளாண் உதவி இயக்குனர் ரவி தலைமையில், திருப்பூர், பொங்கலூர், பல்லடம், அவிநாசி வட்டாரங்களில் முதல் குழு ஆய்வு செய்கிறது. உடுமலை வேளாண் உதவி இயக்குனர் சைலஸ் தலைமையில், உடுமலை, மடத்துக்குளம், பெதப்பம் பட்டி வட்டாரங்களில் ஆய்வு நடக்கிறது. மூன்றா வது குழு காங்கயம் உதவி வேளாண் இயக்குனர் மாணிக்கம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, ஊத்துக்குளி, காங்கயம், வெள்ளகோவில் வட்டாரங்களில் ஆய்வு மேற்கொள்கிறது. தாராபுரம் வேளாண் உதவி இயக்குனர் ஞான சேகர் தலைமையில், நான் காவது குழுவினர் ஆய்வு செய்கின்றனர். தாராபுரம், குண்டடம், மூலனூர் வட் டாரங்களில் உள்ள கடை கள் மற்றும் நிறுவனங் களில் ஆய்வு மேற் கொள்கின்றனர். ஆய்வின் போது, நிர் ணயிக்கப்பட்டுள்ள விலையை காட்டிலும் அதிக விலைக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட தவறு கள் தெரியவந்தால், விற் பனை நிறுத்தம் மற்றும் தற் காலிக உரிமம் ரத்து போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

**கோடை வெயிலுக்கு நிலத்தடி நீரும் வறண்டது: நிலைப்பயிரை காப்பாற்ற விவசாயிகள் தவிப்பு**

உடுமலை : பருவமழை இல்லாமல் கிணறு மற்றும் போர் வெல்கள் வறண்டுள்ள தால், தண்ணீரை விலைக்கு வாங்கி நிலைப்பயிர்களை காப்பாற்ற வேண்டிய அவல நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

குடிமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஆறு, ஓடை போன்ற நீராதாரங் கள் இல்லாததால், நிலத் தடி நீர் மட்டம் குறைந்த பகுதியாக உள்ளது. பி.ஏ.பி., பாசனம் மூலம் நிரப்பப்படும் குளங்கள் மற்றும் மழைக்காலங்களில் உப்பாறு ஓடையில் தேங் கும் தண்ணீரே இப்பகுதி நிலத்தடி நீருக்கு ஆதார மாக உள்ளது. பி.ஏ.பி., வாய்க்காலில் இருந்து உப் பாறு ஓடைக்கு தண்ணீர் திறந்து விட, விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து வருவ தால், ஓடைக்கு நீர் வரத்து கிடைக்கவில்லை. தென்மேற்கு பருவ மழையும் போதிய அளவு பெய்யாததால், உப்பாறு ஓடையில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் வறண்டு கிடக்கின்றன. ஆமந்த கடவு, அம்மாபட்டி, பெரிய பட்டி உட்பட சுற்றுப்பகுதி கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பே குறைந்தது.

இப்பகுதியில், தென்னை சாகுபடி அதிகளவு உள் ளது. பல ஆண்டுகளான மரங்களுக்கு போதிய தண் ணீர் கிடைக்காததால் காய்ப்பு குறைந்து, மரங்கள் காயும் அபாய நிலை ஏற் பட்டது. இப்பகுதி விவ சாயிகள் தேவையான தண் ணீருக்காக போர்வெல்கள் அமைக்க துவங்கினர். ஆனால், ஆயிரம் அடி வரை போடப்பட்ட போர் வெல்களிலும் போதிய தண் ணீர் கிடைக்கவில்லை. ஏமாற்றிய பி.ஏ.பி., பாச னம்: பி.ஏ.பி., பாசனத்தில் மண்டலங்கள் பிரிக்கும் முன், குடிமங்கலம் பகுதி யில் உள்ள குளங்களுக்கு எளிதாக தண்ணீர் கிடைத்து வந்தது. நிலத்தடி நீர் மட் டமும் குறையவில்லை. மண்டலம் பிரிக்கப்பட்ட தால், இரண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை மட்டும் தண்ணீர் திறக்கப்படுகிறது. திட்டத்தில் பயன்பெறும் நிலங்களுக்கே பாசனத்தில் போதிய தண்ணீர் கிடைக் காத நிலையில் குளங்களில் தண்ணீர் நிரப்ப முடிய வில்லை. இவ்வாறு, படிப்படியாக குடிமங்கலம் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் சரிந் தது. பருவமழை மற்றும் பி.ஏ.பி., பாசனம் கைவிட்ட தால் குடிமங்கலம் பகுதி யில் வறட்சி துவங்கி யுள்ளது. கிணறுகளிலும், போர்வெல்களிலும் போதிய தண்ணீர் கிடைக்காமல் தண்ணீரை விலைக்கு வாங்கி, தென்னை மரங் களுக்கு விவசாயிகள் ஊற்றி வருகின்றனர்.

**தீவனப்பற்றாக்குறை; விற்பனையாகின்றன மாடுகள்**

திருப்பூர் : கோடை என்பதால், திருப்பூர் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் மாடுகளுக்கு தேவையான தீவனம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், மாடுகளை விவசாயிகள் விற்க ஆரம்பித் துள்ளனர்.

வாரந்தோறும் திங்கட்கிழமை, திருப்பூர் மாட்டுச்சந்தை கூடுகிறது; நேற்று, 1,200 மாடுகள், கன்றுகள் விற்பனைக்கு வந்திருந்தன. வெயில் காலம் என்பதால் மேய்ச்சலுக்கு வாங் கும் அளவு குறைந்திருந்தது; இறைச் சிக்காகவே அதிகமாக வாங்கப்படுகின்றன. வரும் வாரங்களில் விற்பனைக்கு அதிகமான மாடுகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: திருப்பூர் மாட்டுச்சந்தையில் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் விற்பனை ஆரம்பமாகிறது. சந்தைக்கு 1,000 முதல் 1200 வரை, மாடுகள், கன்றுகள், எருமைகள் விற் பனைக்கு வருகின்றன. கேரளா மற்றும் ஊட்டி பகுதிகளுக்கு, இறைச் சிக்காகவே அதிகளவில் மாடுகளை வாங்குகின்றனர். கன்றுகள், 4,000 ரூபாய் வரையிலும், மாடுகள் 37 ஆயிரம் ரூபாய் வரையிலும் விற்பனையாகின்றன. வெயில் காலம் என்பதால் மாடுகளுக்கு தேவையான தீவனம் மற்றும் தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்பட் டுள்ளது. மேய்ச்சலுக்கு வாங்குவோர் எண்ணிக்கை குறைந்து வருகிறது; நன்றாக மழை பொழிந்தால் மட்டுமே, மேய்ச்சலுக்கு வாங்கும் விகிதம் அதிகரிக்கும். வரும் வாரங்களில் இருந்து விற்பனைக்கு வரும் மாடுகள் அதிகளவில் இருக்கும். கோடையை சமாளிக்க, மாடுகளை வைத்துவிட்டு, கன்றுகளை விற்போர் எண்ணிக்கை உயரும் வாய்ப்புள்ளது. இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பஞ்சு ஏற்றுமதியாளர் கையில் மத்திய அரசு: திருப்பூர் எம்.பி., குற்றச்சாட்டு**

திருப்பூர் : "கடந்த 2008-09ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பஞ்சுக்கு, மத்திய அரசு ஓராண்டுக்கு பிறகு மானிய உதவி வழங்கி உள்ளது. பஞ்சு ஏற்றுமதியாளர் கையில் மத்திய அரசு சிக்கியுள்ளது, இதன் மூலம் தெளிவாகிறது" என,

எம்.பி., சிவசாமி தெரிவித்தார்.திருப்பூர் எம்.பி., சிவசாமி நிருபர்களிடம் கூறியதாவது: பருத்தி ஏற்றுமதியின் காரணமாக, நூல் விலை உயர்ந்து, பனியன், விசைத்தறி, நூற்பாலைகள் என, அனைத்து தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் வேலை இழப்பதோடு, ஆலைகளை இழுத்து மூட வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

பனியன் தொழிலை பொறுத்தவரையில், வெளிநாடுகளுடன் போட்டியிட்டதால் தான் வெற்றிபெற முடியும். நூல்விலை அதற்கு இடையூறாக இருப்பதால், தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தினமும் 12 மணி நேர மின்சாரம் மட்டுமே கிடைப்பதால், உற்பத்தியிலும் 50 சதவீதம் குறைந்துவிடுகிறது. மேலும், அபரிமிதமான பருத்தி ஏற்றுமதியால், பஞ்சு விலை ஏற்றம், நூல் விலை ஏற்றம் என, தொழில் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நூல் விலை கட்டுப்படியாகாமல் இருப்பதால், பனியன் நிறுவனங்களில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வெளிநாடுகளுடன் போட்டியிட முடிவதில்லை. இந்திய ஆர்டர்கள் வெளிநாடுகளுக்கு கைமாறும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. நூல் விலை உயர்வு, மின்தட்டுப்பாடு, டாலர் மதிப்பு வீழ்ச்சி உள்ளிட்ட காரணங்களால், பனியன் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பருத்தியையும், பருத்தி பஞ்சையும் ஏற்றுமதி செய்யக்கூடாது. பஞ்சில் இருந்து உற்பத்தியாகும் பொருட்களை மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டும். நேரடியாக பஞ்சு ஏற்றுமதி செய்ததால், நூல் உற்பத்தி குறைந்துள்ளது. இருப்பினும், பஞ்சு ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிக்காமல், மெத்தன போக்கையே கடைபிடிக்கிறது. கடந்த 2008-09ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பஞ்சுக்கு, மத்திய அரசு ஓராண்டுக்கு பிறகு மானிய உதவி வழங்கி உள்ளது. பஞ்சு ஏற்றுமதியாளர் கையில் மத்திய அரசு சிக்கியுள்ளது இதன்மூலம் தெளிவாகிறது.

மத்திய ஜவுளித்துறை அமைச்சகம்,' நூலை பதுக்கி வைத்து விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என எச்சரித்துள்ளது. அதேவேகத்தில், பருத்தியை பதுக்கி வைத்து கொள்ளை லாபம் சம்பாதிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா? பருத்தியை பதுக்கி வைத்து, சிறு, குறு நிறுவனங்களின் வயிற்றில் அடிப்போர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதுபோல், உள்நாட்டு நிறுவனங்களுக்கும் மானிய விலையில், மின்சாரம் வழங்க வேண்டும். உள்நாட்டு தேவை போக, மீதியுள்ள பஞ்சு மட்டுமே ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும். நூல் போன்ற மூலப்பொருள் ஏற்றுமதிக்கு தடைவிதிக்க வேண்டும். அதற்கான ஊக்கத்தொகையை முற்றிலும் ரத்துசெய்துவிட்டு, புதிய வரிவிதிப்பை அமலாக்க வேண்டும். ஜவுளித்துறைக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்க வேண்டும். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**திடக்கழிவு உரத்தில் காலிபிளவர்!: கலக்குது கூடலூர் பேரூராட்சி**

ஏப்ரல் 13,2010,00:00  IST

---



பெ.நா.பாளையம்: திடக்கழிவில் தயாரிக்கப் பட்ட கலவை உரத்தை பயன்படுத்தி காலிபிளவர் உற்பத்தி செய்யும் பணி, கூடலூர் பேரூராட்சியில் துவங்கியது. இப்பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பல்வேறு நிறுவனங்கள், தொழிற்சாலைகளிலிருந்து மாதம் தோறும் ஏழு 'டன்' குப்பை சேகரிக்கப்படுகிறது. இவை மட்கும், மட்காத குப்பையாக தரம் பிரிக்கப்படுகிறது. மட்கும் குப்பையில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கவும், மட்காத குப்பைகளை 'பிளாஸ் டிக்' பைகளில் அடைத்து மறுசுழச்சி செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

இதற்காக அமைக்கப்பட்ட 'கம்போஸ்ட்' பூங்காவிலிருந்து மாதம் ஒன்றுக்கு மூன்று டன் இயற்கை உரம், மண்புழு உரம், 'பஞ்சகாவ்யா' தயாரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கும், தனியாருக்கும் விற் பனை செய்யப்படுகிறது. தவிர கூடலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வீட்டுக்கு பின்புறம் சமையல் கழிவுகளை கொண்டு உரம் தயாரிக்கும் முறையும் செயல்படுத்தப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுவினரை கொண்டு இயற்கை உரங்களை பயன்படுத்தி வெண்டை, முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகள் பயிரிட்டு விற்பனை செய்யும் பணி கடந்த ஆண்டில் துவங்கியது. சில மாதங்களுக்கு முன் கலவை உரம், வைக்கோல் ஆகியவற்றை கொண்டு காளான் உற்பத்தி நடந்தது. தற்போது, காலிபிளவர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. காலிபிளவர் விற்பனையை கூடலூர் பேரூராட்சி தலைவர் ரங்கசாமி, செயல் அலுவலர் கல்யாணசுந்தரம் ஆகியோர் துவக்கி வைத்தனர். படிப்படியாக அனைத்து வகையான காய்கறிகளையும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக பேரூராட்சி நிர்வாகம் தெரிவித்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**உள்நாட்டில் விலை உயர்வை கட்டுப்படுத்த பருப்பு வகைகள் இறக்குமதி மீதான சலுகை ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

துவரம் பருப்பு, உளுந்து உள்ளிட்ட பருப்பு வகைகளின் விலை உயர்ந்து வருகிறது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், இவற்றின் இறக்குமதி மீதான மானியச் சலுகையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மானியம்

எஸ்.டி.சி., எம்.எம்.டி.சி., பி.இ.சி. மற்றும் நாஃபெட் ஆகிய பொதுத் துறை நிறுவனங்கள், பருப்பு வகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றன. உள்நாட்டைக் காட்டிலும், வெளிநாடுகளில் விலை அதிகமாக இருக்கும்போது, இதனால் இந்நிறுவனங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பிற்காக, மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. இந்த மானியச் சலுகை இவ்வாண்டு மார்ச் 31–ந் தேதியுடன் முடிவடைய இருந்தது. இச்சலுகை செப்டம்பர் 30–ந் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது.

பருப்பு வகைகள் பயன்பாடு மற்றும் இறக்குமதியில் இந்தியா உலக அளவில் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில், ஆண்டுக்கு 1.70–1.80 கோடி டன் பருப்பு வகைகள் தேவைப்படுகிறது. அதேசமயம், நடப்பு ஆண்டில் உற்பத்தி 1.47 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக, பற்றாக்குறை 33 லட்சம் டன்னாக உள்ளது.

7 லட்சம் டன்

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், எஸ்.டி.சி. உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்கள் 7 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்துள்ளன. இதில், 6 லட்சம் டன்னை ரேஷன் கடைகள் வாயிலாக விற்பனை செய்வதற்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு ஒரு கிலோவிற்கு ரூ.10 மானிய விலையில் வழங்கவும் தீர்மானித்துள்ளது. இச்சலுகை வரும் 2011–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இருக்கும் என்று தெரிய வந்துள்ளது. பருப்பு வகைகள் உள்ளிட்ட முக்கிய உணவு பொருள்களின் விலை உயர்ந்து வருவதையடுத்து, சென்ற மார்ச் 27–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 17.70 சதவீதமாக அதிகரித்துள்ளது. எனவே, பருப்பு வகைகள் போதுமான அளவில் கிடைக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**நாளை இரவு முதல் 10 ஆயிரம் விசை படகுகளுக்கு தடை: தமிழகத்தில் மீன் விலை உயரும் அபாயம் தேவையை சமாளிக்க அண்டை மாநிலங்களில் இருந்து இறக்குமதி**

*சென்னை, ஏப்.13–*

*நாளை இரவு முதல் 45 நாட்களுக்கு தொடரும் மீன்பிடி தடை காலத்தில் 10 ஆயிரம் விசை படகுகள் கடலுக்குள் செல்லாது. இதனால், தமிழகத்தில் மீன் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தேவையை சமாளிக்க அண்டை மாநிலங் களில் இருந்து மீன் கள் இறக்குமதி செய்யப் படுகிறது.*

*மீன்பிடி தடை காலம்*

*ஆண்டுதோறும் ஏப்ரல் 15–ந் தேதி முதல் மே மாதம் 29–ந் தேதி வரை, 45 நாட்கள் மீன்களின் இனப்பெருக்க காலம் என கண்டறியப்பட்டு, கடந்த 12 ஆண்டுகளாக அந்த நாட்களில், ஆழ்கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது.*

*அந்த காலக்கட்டத்தில் ஆழ்கடலில் மீன்பிடிக்க விசை படகுகளுக்கு அனுமதி கிடையாது. கடலில் குறைந்த தூரம் சென்று மீன்பிடிக்கும் பைபர் மற்றும் கட்டுமரங் களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.*

*10 ஆயிரம் விசை படகுகள்*

*இந்த ஆண்டு மீன்பிடி தடை காலம் நாளை (புதன்கிழமை) இரவு முதல் மே மாதம் 29–ந் தேதி வரை நீடிக்கிறது. இந்த நாட்களில் தமிழகத்தில் 10 ஆயிரம் விசை படகுகள் கடலுக்குள் செல்லாது. படகு மற்றும் வலைகளை பரா மரிக்கும் பணியில் மீனவர்கள் ஈடுபடுவார்கள்.*

*விசை படகுகள் கடலுக்குள் செல்லாததால், தமிழகத்தில் 85 சதவீத மீன் உற்பத்தி பாதிக்கப்படும். இதனால், தமிழகத்தில் மீன் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள் ளது. கடந்த ஆண்டு இதே நேரத்தில் 40 சதவீதம் வரை மீன் விலை உயர்ந்தது. தமிழகத்தின் மீன் தேவையை சமாளிக்க கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுகிறது.*

*ரூ.5 கோடி இழப்பு*

*மீன்பிடி தடை காலத்தில், தமிழக விசை படகு மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.5 கோடி இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை சமாளிக்க அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இதுகுறித்து, அகில இந்திய மீனவர் சங்க செய்தி தொடர்பாளர் நாஞ்சில் ரவி கூறும்போது, "கடந்த ஆண்டு தமிழக அரசு சார்பில் மீன்பிடி தடை காலத்தில் ரூ.500 நிவாரண உதவி வழங்கப் பட்டது. அதுவும் மீனவ குடும்பத்தில் ஒருவருக் குத்தான் கொடுக்கப் பட்டது. புதுச்சேரியில் இந்த ஆண்டு மீனவர்களுக்கு ரூ.2,700 நிவாரண உதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளனர். அதுபோல், தமிழகத்திலும் நிவாரண உதவியை உயர்த்தி வழங்க முதல்–அமைச்சர் கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.*

**தேங்காய் எண்ணைக்கு மானியம் வழங்க மத்திய அரசு ஆலோசனைவிவசாய துறை மந்திரி சரத்பவார் தகவல்**

*பெரும்பாவூர், ஏப்.13–*

*தேங்காய் எண்ணைக்கு மானியம் வழங்க மத்திய அரசு ஆலோசித்து வருவதாக மத்திய விவசாய துறை மந்திரி சரத்பவார் தெரிவித்துள்ளார்.*

*கருத்தரங்கு*

*மத்திய விவசாய துறை மந்திரி சரத்பவார் திருச்சூர் சேத்து பகுதியில் நடந்த மீன்பிடி துறைமுக தொடக்க விழாவில் கலந்து கொண்டார். பின்னர் அவர் கொச்சிக்கு வந்தார். அங்கு கொச்சி தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகத்தில் நடந்த கருத்தரங்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.*

*அப்போது அவர் கூறியதாவது:–தேங்காய் எண்ணைக்கு மத்திய அரசு மானியம் வழங்குவது குறித்து ஆலோசித்து வருகிறது. கூடுதல் எண்ணை சத்துள்ள புதிய இன தென்னை மரம் வளர்ப்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ள*

வேண்டும். தற்போது தென்னை மரம் பல நோய் தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது. இதில் இருந்து பாதுகாப்பு பெறத்தக்க வகையில் பல புதிய விஞ்ஞான தொழில்நுட்பங்களை மேற்கொள்ள வேண்டும். தென்னை வளர்ச்சிக்கும் பாதுகாப்பு அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சரத்பவார் கூறினார்.

கையேடு வெளியீடு

அதைத்தொடர்ந்து தென்னை வளர்ச்சி வாரிய கொச்சி அலுவலகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தென்னை அருங்காட்சியகத்தை சரத்பவார் திறந்துவைத்தார். பின்னர் தென்னை ஏற்றுமதி குறித்த கையேடு ஒன்றை அவர் வெளியிட்டார். இதை தென்னை விவசாயத்தில் சிறந்து விளங்கும் தீபாலால்அணில் பெற்றுக்கொண்டார்.

விழாவில் மத்திய விவசாய துறை இணை மந்திரி கே.வி.தாமஸ், தென்னை வளர்ச்சி வாரிய தலைவர் மனிமேத்யூ, சுந்தரராமராஜூ, வர்க்கலை ரவிக்குமார், மகாலிங்கம், வசந்தா விஷ்ணு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பாலக்காடு அருகே நவீன மாட்டுத்தீவனங்கள் தயாரிக்க மில்மா சார்பில் புதிய தொழிற்சாலை

பாலக்காடு,ஏப்.13–

பாலக்காடு அருகே அதிநவீன மாட்டுத்தீவனங்கள் தயாரிக்க மில்மா சார்பில் புதிய தொழிற்சாலை ரூ.1½ கோடி செலவில் அமைக்கப்பட்டு உள்ளது.

பால் உற்பத்தி குறைவு

கேரளாவில் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பாலை கொள்முதல் செய்து அதை விற்று வருவது கேரள அரசின் பொதுத்துறை நிறுவனமான மில்மா ஆகும். கடந்த சில மாதங்களாக கேரளாவில் பால் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. அதே நேரத்தில் உபயோகிப்பாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது.

கேரளாவில் 50 சதவீத பால் உற்பத்தி குறைவுக்கு என்ன காரணம்? என்று ஆராய்ந்த போது, மாட்டுத்தீவனங்கள் சரி இல்லாததே காரணம் என்று தெரிய வந்தது. பால் உற்பத்தி அதிகரிக்க என்ன செய்யலாம்? என்று மில்மா நிர்வாகத்தினர் ஆலோசனை நடத்தினார்கள். புதிதாக மாட்டுத்தீவனங்களை தயாரித்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கலாம் என்று முடிவு செய்தனர்.

ரூ.1½ கோடி செலவில்

இதன்படி மில்மா நிர்வாகத்தினர் குஜராத் மாநிலம், உத்தரபிரதேச மாநிலம், ராய்பரேலி ஆகிய பகுதிகளில் உள்ள மாட்டுத்தீவனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு சென்று பார்வையிட்டார்கள். அங்கு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி விட்டு கேரளா திரும்பினார்கள்.

இதையடுத்து மில்மா சார்பில் பாலக்காடு மாவட்டம், பட்டன்சேரியில் புதியதாக மாட்டுத்தீவனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இதற்காக ரூ.1½ கோடி செலவில் வெளிநாட்டில் இருந்து புதிய எந்திரங்கள் வரவழைக்கப்பட்டன. இங்கு சமஅளவு வைக்கோல், சம அளவு பருத்திக்கொட்டை, உணவு பொருட்கள் கலந்து மாட்டுத்தீவனங்கள் தயாரிக்கப்படுகிறது. புதிய தொழிற்சாலை பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளதால் பால் உற்பத்தி அதிகரிக்கும் என்று மில்மா நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.